(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவையின் 6 (1) விதியின்படி, கீழ்க்கண்ட உறுப்பினர்களை பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :—

திரு. செ. கந்தப்பன்.

திரு. எஸ். முருகையன்.

திரு. பெ. மலைச்சாமி.

திரு. என். டென்னிஸ்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி.

திரு. எம். சுரேந்திரன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் . . . .

DR. H. V. HANDE: Sir, on a point of information. I have given notice of an adjournment motion with regard to Simpson Group of Companies. May I know whether it is going to be taken up to-day. Will the Hon. Speaker kindly indicate when it is going to be taken?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை இன்றைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. எடுத்துக் கொள்வதாக இருந்தால், உங்களிடத்தில் சொல்லியிருப்பேன். சொல்லாததால், எடுக்கவில்லை என்று பொருள்.

அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் திரு. எஸ். கந்தப்பன்.

(5) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்.

* **திரு. செ. கந்தப்பன்:** "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும்".

'1972-ம் ஆண்டு சனவரித் திங்கள் 22-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்ட மன்ற கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'.

திரு. து. ப. அழகமுத்து: நான் இதை வழிமொழிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. செ. மாதவன்: அவை துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் அவர்களுடைய உரையிலே இந்த அரசினுடைய நோக்கங்களைப் பற்றியும்,

---

* 92-99-ம் பக்கங்களில் முதல் இணைப்பாகவும், பேருரையின் தமிழாக்கம் 98-108-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாகவும் அச்சிடப்பட்டுள்ளன.